பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை- 4

02 09 2024 | 7 15 | செய்தி ஆசிரியர்
புதன்கிழமை | காலை | ஜெ. காமராஜ்

வணக்கம், ஆகாஷவாணி

செய்திகள் - வாசிப்பவர் - கோபாலகிருஷ்ணன்

## தலைப்புச் செய்திகள்

1. அகிம்சை, அன்பு உள்ளிட்ட மகாத்மா காந்தியின் போதனைகளைப் பின்பற்றி நாட்டை முன்னேற்றப் பாதையில் கொண்டு செல்ல மக்கள் முன்வர வேண்டும் என்று குடியரசுத்தலைவர் திருமதி திரௌபதி முர்மு கேட்டுக்கொண்டுள்ளார்.

2. பிரதமர் திரு. நரேந்திர மோடி, ஜார்கண்ட் மாநிலம் ஹசாரிபாக்கில் பழங்குடியினர் கிராம மேம்பாட்டு திட்டத்தை இன்று தொடங்கி வைக்கிறார்.

3. நாடு முழுவதும் கடந்த 10 ஆண்டுகளில் 22 எய்ம்ஸ் மருத்துவமனைகள் தொடங்கப்பட்டுள்ளதாக மத்திய இணையமைச்சர் திரு. பிரதாப் ராவ் ஜாதவ் தெரிவித்துள்ளார்.

4. வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட 14 மாநிலங்களுக்கு 5 ஆயிரத்து 850 கோடி ரூபாயை பேரிடர் நிவாரண நிதியில் இருந்து மத்திய அரசு விடுவித்துள்ளது.

5. ஹெஸ்புல்லா தலைவர் கொல்லப்பட்டதற்கு பதிலடியாக இஸ்ரேல் மீது 180 ஏவுகணைகளை வீசி ஈரான் தாக்குதல் நடத்தியுள்ளது.

*---- இனி விரிவான செய்திகள் ---*

<<<<>>>>

ஜம்மு-கஷ்மீர் சட்டப்பேரவைக்கு 3வது மற்றும் இறுதிக்கட்டமாக நேற்று நடைபெற்ற தேர்தலில் 65 புள்ளி ஆறு ஐந்து சதவீத வாக்குகள் பதிவாகி உள்ளன.

ஏற்கனவே கடந்த மாதம் 18 மற்றும் 25ஆம் தேதிகளில் இரண்டு கட்ட தேர்தல்கள் முடிவந்த நிலையில், மூன்றாவது மற்றும் இறுதிக்கட்டமாக 24 தொகுதிகளில் நேற்று வாக்குப்பதிவு அமைதியாக நடைபெற்று முடிந்தது.

அதிகபட்சமாக பந்திப்போராவில் 75 புள்ளி எட்டு ஒன்பது சதவீதமும், சம்பா மாவட்டத்தில் 73 புள்ளி நான்கு ஐந்து சதவீத வாக்குளும், உதம்பூரில் 72 புள்ளி ஒன்பது ஒன்று சதவீத வாக்குகளும் பதிவானதாக தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ளது.

எந்தவொரு அசம்பாவித சம்பவங்களும் இல்லாமல் தேர்தல் நடைபெற்றதாக தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ளது.

வாக்கு எண்ணிக்கை வரும் 8ஆம் தேதி நடைபெறும்.

இதற்கிடையே வாக்காளர்களுக்கு ஜம்மு-கஷ்மீர் துணைநிலை ஆளுநர் திரு. மனோஜ் சின்ஹா பாராட்டு தெரிவித்துள்ளார்.

மூன்று கட்ட தேர்தல்களிலும் மிகுந்த ஆர்வத்துடன் மக்கள் தங்கள் ஜனநாயக கடமையை நிறைவேற்றியதற்காக வாழ்த்துகளையும் அவர் சமூக வலைதளத்தில் தெரிவித்துள்ளார்.

<<<<>>>>

ஹெஸ்புல்லா மற்றும் ஹமாஸ் அமைப்பின் தலைவர்கள் கொல்லப்பட்டதற்கு பதிலடி கொடுக்கும் வகையில் இஸ்ரேல் மீது ஈரான் ஏவுகணை தாக்குதல்களை நடத்தியுள்ளது.

ஹமாஸ் அமைப்புக்கு ஆதரவு தெரிவித்த லெபனான் மீது இஸ்ரேல் ராணுவப் படையினர் கடந்த ஒரு வாரமாக வான்வழித் தாக்குதல்களை நடத்தினர்.

இதற்கு பதிலடி கொடுக்கும் வகையில் ஈரான் ராணுவத்தினர் நேற்று ஜெருசலேம் மற்றும் டெல் அவிவ் பகுதிகளில் 180க்கும் மேற்பட்ட ஏவுகணைகளை வீசி தாக்குதலில் ஈடுபட்டது.

இதனால் இஸ்ரேல் ராணுவத்தினர் பாதுகாப்பான இடங்களை நோக்கிச் சென்றதாக அந்நாட்டு ராணுவ செய்தித்தொடர்பாளர் திரு. டேனியல் தெரிவித்துள்ளார்.

எனினும் உயிரிழப்பு ஏதும் ஏற்படவில்லை என்றும் அவர் கூறினார்.

ஈரான் ராணுவம் தாக்குதல் காரணமாக இஸ்ரேல் பகுதியில் பயங்கர துப்பாக்கி மற்றும் வெடிகுண்டு தாக்குதல்கள் நீடித்ததாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதனிடையே இஸ்ரேலில் வசிக்கும் இந்தியர்கள் பாதுகாப்புடன் இருக்குமாறு அங்குள்ள இந்தியத் தூதரகம் அறிவுறுத்தியுள்ளது.

உள்ளூர் அதிகாரிகளின் அறிவுறுரைப்படி பாதுகாப்பு நடைமுறைகளை பின்பற்ற வேண்டும் என்றும், தேவையின்றி இஸ்ரேல் நாட்டில் பயணம் மேற்கொள்வதை தவிர்க்க வேண்டும் என்றும் டெல் அவிவ் நகரில் உள்ள இந்திய தூதரகம் வெளியிட்ட அறிக்கை தெரிவிக்கிறது.

அனைத்து இந்தியர்களின் பாதுகாப்பை உறுதி செய்யும் வகையில் இஸ்ரேல் அதிகாரிகளுடன் இந்தியத் தூதரகம் தொடர்பில் உள்ளதாகவும் அதில் கூறப்பட்டுள்ளது.

<<<<>>>>

பிரதமர் திரு. நரேந்திர மோடி ஒருநாள் பயணமாக இன்று ஜார்கண்ட் மாநிலம் ஹசாரிபாக் செல்கிறார்.

அங்குள்ள வினோபாபாவே பல்கலைக்கழகத்தில் நடைபெறும் நிகழ்ச்சியில் 79 ஆயிரத்து 156 கோடி ரூபாய் மதிப்பிலான பழங்குடியினர் கிராம மேம்பாட்டு திட்டத்தை பிரதமர் தொடங்கி வைக்கிறார்.

பின்னர் அங்குள்ள காந்தி மைதானத்தில் நடைபெறும் பொதுக்கூட்டத்தில் பிரதமர் உரையாற்ற உள்ளார்.

இதற்கிடையே பழங்குடியினர் கிராம மேம்பாட்டுத் திட்டம் குறித்து செய்தியாளர்களிடம் பேசிய மத்திய பழங்குடியினர் நலத்துறை அமைச்சர் திரு. ஜுவல் ஓரம், பழங்குடியின மக்களின் சமூகப் பொருளாதார நிலையை மேம்படுத்தும் நோக்கில் இத்திட்டம் தொடங்கப்படுவதாக தெரிவித்துள்ளார்.

பழங்குடியினர் அதிகம் வசிக்கும் கிராமங்களிலும், சம்பந்தப்பட்ட மாவட்டங்களிலும் அடிப்படை வசதிகளை மேம்படுத்தும் வகையில் இந்தத் திட்டம் செயல்படுத்தப்படுவதாகவும், 63 ஆயிரம் கிராமங்களில் 5 கோடிக்கும் மேற்பட்ட பழங்குடியின மக்கள் பயன்பெறுவார்கள் என்றும் திரு. ஜுவல் ஓரம் கூறினார்.

<<<<>>>>

தேசப்பிதா மகாத்மா காந்தியின் 155வது ஆண்டு பிறந்த தினம் இன்று கொண்டாடப்படுகிறது.

இதையொட்டி நாடு முழுவதும் பல்வேறு நிகழ்ச்சிகளுக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

வெளிநாடுகளில் உள்ள இந்திய தூதரகங்களிலும் நிகழ்ச்சிகள் நடைபெற உள்ளன.

புதுதில்லி ராஜ்காட்டில் உள்ள காந்தி நினைவிடத்தில் சர்வமத பிரார்த்தனைக்கும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

<<<<>>>>

மகாத்மா காந்தியின் போதனைகளான அகிம்சை, அன்பு உள்ளிட்ட கொள்கைகளை கடைபிடித்து நாட்டை தொடர்ந்து முன்னேற்றப் பாதையில் கொண்டு செல்ல மக்கள் முன்வர வேண்டும் குடியரசுத்தலைவர் திருமதி திரௌபதி முர்மு கேட்டுக்கொண்டுள்ளார்.

காந்தி பிறந்த தினத்தையொட்டி, குடியரசுத்தலைவர் திருமதி திரௌபதி முர்மு வெளியிட்டுள்ள செய்தியில், அமைதி மற்றும் கூட்டுறவுப் பாதையை மக்கள் பின்பற்ற வேண்டும் என மகாத்மா காந்தி வலியுறுத்தியதை அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

அகிம்சையை தீவிரமாக பின்பற்றிய மகாத்மா காந்தியின் வாழ்க்கை ஒட்டுமொத்த மனித சமுதாயத்திற்கும் உறுதியான செய்தியை வெளிப்படுத்துவதாக அமைந்துள்ளது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

தீண்டாமை, கல்வியறிவின்மை, சுகாதாரமின்மை போன்ற சமூக தீமைகளை முழுவதுமாக ஒழிக்க அவர் அயராது பாடுபட்டதாகவும் திருமதி திரௌபதி முர்மு அந்த செய்தியில் தெரிவித்துள்ளார்.

<<<<>>>>

புதுதில்லியில் தூய்மை இந்தியா இயக்கம் தொடங்கப்பட்டதன் 10வது ஆண்டு தினம் இன்று கொண்டாடப்படுகிறது.

இந்த நிகழ்ச்சியில் பிரதமர் திரு. நரேந்திர மோடி பங்கேற்று 9 ஆயிரத்து 600 கோடி ரூபாய் மதிப்பிலான பல்வேறு திட்டங்களை தொடங்கி வைப்பதுடன் புதிய திட்டங்களுக்கும் அடிக்கல் நாட்டுகிறார்.

தூய்மை இந்தியா இயக்கம் தூய்மையை வலியுறுத்தும் வகையில் மிகப்பெரிய மக்கள் இயக்கமாக தொடங்கப்பட்டு செயல்படுத்தப்பட்டு வருகிறது.

கடந்த 2004ஆம் ஆண்டு இதே நாளில் தொடங்கப்பட்ட இந்த இயக்கத்தின் ஆண்டு தின நிகழ்ச்சியில் தூய்மை மற்றும் சுகாதாரம் தொடர்பான பல்வேறு திட்டங்களுக்கு பிரதமர் அடிக்கல் நாட்டுகிறார்.

அம்ருத் திட்டத்தின்கீழ் நகர்ப்புற குடிநீர் மற்றும் கழிவுநீர் மேலாண்மை திட்டம், 6 ஆயிரத்து 800 கோடி ரூபாயில் தொடங்கப்பட உள்ளது.

ஆயிரத்து 550 கோடி ரூபாய் மதிப்பில் நீரின் தரத்தை மேம்படுத்தும் 10 திட்டங்களும், கங்கை ஆற்றின் முகத்துவார பகுதிகளில் கழிவுநீர் மேலாண்மை திட்டமும் தொடங்கி வைக்கப்பட உள்ளது.

<<<<>>>>

வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட 14 மாநிலங்களுக்கு 5 ஆயிரத்து 850 கோடி ரூபாய் நிதியை மத்திய அரசு விடுவித்துள்ளது.

தேசிய பேரிடர் நிவாரண நிதியில் இருந்து மகாராஷ்டிரா மாநிலத்திற்கு ஆயிரத்து 492 கோடி ரூபாயும், ஆந்திர மாநிலத்திற்கு ஆயிரம் கோடி ரூபாயும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக உள்துறை அமைச்சகம் தெரிவித்துள்ளது.

அண்மையில் வெள்ளத்தால் மோசமான பாதிப்பை எதிர்கொண்ட கேரள மாநிலத்திற்கு மறுசீரமைப்பு பணிகளை மேற்கொள்ள 145 கோடியே 60 லட்சம் ரூபாய் விடுவிக்கப்பட்டிருப்பதாக மத்திய அரசு தெரிவித்துள்ளது.

தென்மேற்குப் பருவ மழையால் கனமழை, வெள்ளம், நிலச்சரிவால் பாதிக்கப்பட்ட மாநிலங்களான அசாம், மிசோரம், நாகாலாந்து, குஜராத், ஆந்திரா, மணிப்பூர் உள்ளிட்ட மாநிலங்களில் மத்திய குழுவினர் மேற்கொண்ட மதிப்பீட்டின் அடிப்படையில் இந்த நிதி விடுவிக்கப்பட்டுள்ளது.

பீஹார் மற்றும் மேற்குவங்க மாநிலங்களில் பாதிக்கப்பட்ட பகுதிகளை மத்திய குழுவினர் விரைவில் சென்று அறிக்கை அளித்த பின்னர் அந்த மாநிலங்களுக்கு நிதி ஒப்புதல் அளிக்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனிடையே இந்த ஆண்டில் 21 மாநிலங்களுக்கு இதுவரை 14 ஆயிரத்து தொள்ளாயிரம் கோடி ரூபாய் பேரிடர் நிவாரண நிதி விடுவிக்கப்பட்டிருப்பதாக உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா சமூக வலைதளத்தில் தெரிவித்துள்ளார்.

<<<<>>>>

நாடு முழுவதும் கடந்த 10 ஆண்டுகளில் 22 எய்ம்ஸ் மருத்துவமனைகள் தொடங்கப்பட்டுள்ளதாக மத்திய ஆயுஷ் மற்றும் சுகாதாரத்துறை இணையமைச்சர் திரு. பிரதாப் ராவ் ஜாதவ் தெரிவித்துள்ளார்.

தேசிய ஜனநாயக கூட்டணி அரசு மூன்றாவது முறையாக பொறுப்பேற்று 100 நாட்கள் நிறைவடைந்துள்ள நிலையில், அரசின் சாதனைகள் குறித்து மஹாராஷ்டிர மாநிலம் புல்தானாவில் செய்தியாளர்களுக்கு அளித்த பேட்டியில் அவர் இதனைத் தெரிவித்தார்.

மஹாராஷ்டிர மாநிலத்தில் மட்டும் தேசிய மருத்துவ ஆணையம் 8 மருத்துவ கல்லூரிகளுக்கு ஒப்புதல் வழங்கியிருப்பதாக அவர் கூறினார்.

இந்த ஆண்டு மட்டும் கூடுதலாக 800 மருத்துவ இடங்களுக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

கடந்த 10 ஆண்டுகளில் ஒரு லட்சத்து 15 ஆயிரத்து 812 மாணவர்கள் கூடுதலாக மருத்துவக் கல்வியில் சேர்ந்துள்ளதாகவும், அனைத்து நோய்களுக்கும் சிகிச்சை அளிக்கக்கூடிய வகையில் 22 புதிய எய்ம்ஸ் மருத்துவமனைகள் ஏற்படுத்தப்பட்டிருப்பதாகவும் திரு. பிரதாப் ராவ் ஜாதவ் தெரிவித்தார்.

<<<<>>>>

ஐ.எஸ்.எல். கால்பந்து போட்டியில் சென்னை – ஹைதராபாத் அணிகளுக்கு இடையேயான ஆட்டம் டிராவில் முடிவடைந்தது.

நேற்று நடைபெற்ற இப்போட்டியின் ஆட்டநேர இறுதிவரை இரு அணிகளும் கோல் எதுவும் போடவில்லை.

இன்று நடைபெறும் ஆட்டத்தில் மும்பை – பெங்களூரு அணிகள் மோதுகின்றன. இப்போட்டி இரவு 7.30 மணிக்கு தொடங்குகிறது.

<<<<>>>>

ஷாங்காய் சர்வதேச டென்னிஸ் போட்டியில் இன்று நடைபெற உள்ள ஆடவர் ஒற்றையர் பிரிவு ஆட்டத்தில் இந்தியாவின் சுமித் நாகல் - சீனாவின் **Yibing Wu**-ஐ எதிர்கொள்கிறார்.

இந்திய நேரப்படி இப்போட்டி காலை 10 மணிக்கு தொடங்குகிறது.

<<<<>>>>

ஸ்பெயின் சர்வதேச சேலஞ்சர் டென்னிஸ் போட்டியில் ஆடவர் இரட்டையர் பிரிவில் இந்தியாவின் ஜீவன் நெடுஞ்செழியன் - விஜய்சுந்தர் பிரசாந்த் இணை – பிரான்ஸ் நாட்டின் **Robin Bertrand – Benoit Paire** இணையை எதிர்கொள்கிறது.

<<<<>>>>

இந்தியாவுக்கு எதிரான 19 வயதுக்கு உட்பட்டோருக்கான முதலாவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டியின் இரண்டாவது நாளான நேற்று ஆஸ்திரேலியா தனது இரண்டாவது இன்னிங்ஸில் ஆட்டநேர இறுதியில் நான்கு விக்கெட் இழப்புக்கு 110 ரன் எடுத்தது. இதன் மூலம் அந்த அணி 107 ரன் முன்னிலை பெற்றுள்ளது.

சென்னையில் நடைபெற்று வரும் இப்போட்டியில் இந்தியா முதல் இன்னிங்ஸில் 296 ரன்னுக்கு ஆட்டமிழந்தது.

ஆஸ்திரேலியா முதல் இன்னிங்கிஸில் 293 ரன் எடுத்தது.

**<<<<The End>>>>**